1982 ஏப்ரல் 1]

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பஸ் விட ஆய்வுகள் செய்யப்படுகின்றன என்று கூறினார்கள். அந்த ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டுவிட்டனவா? அந்தப் பணி எப்பொழுது முடிக்கப்படும்? அந்தப் பகுதியில் அந்தப் போக்கு வரத்து பஸ் வசதி எப்பொழுது செய்து தரப்படும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நான் ஆய்விலே இருப்பதாகச் சொன்னேன். விரைவாக முடித்து விடுவார்கள் என நம்புகிறேன். அந்த ஆய்வுப் பணி முடிந்த பின்பு தேவை என்றால் பேருந்து விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராம்பட்டு, நாரையூர், ஆலந்தல், அந்தம் பள்ளி போன்ற பகுதிகள் எல்லாம் தென் ஆற்காடு மாவட்டத்தை ஒட்டி இருப்பதால் திருவண்ணாமலைக்கும் மதுராம் பட்டுக்கும் கிட்டத்தட்ட 25 மைல் தூரம் இருப்பதால், தனியார் போக்குவரத்து வசதியும் கிடையாது, அரசாங்க பஸ் போக்குவரத்து வசதியும் கிடையாது என்ற நிலையில், தனியார் பஸ்களையோ, அரசாங்க பஸ்களையோ உடனடியாக விடுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, பேருந்து வசதி கொடுக்கப்பட வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தினுடைய நோக்கம். எனவே, அந்த அடிப்படையிலே அங்கே பேருந்துகள் இல்லாமல் இருக்குமானால் அதற்கான நடவடிக்கையை அரசாங்கம் துரிதமாக எடுக்கும்.

TRUTH ALONE TRIUMPHS

காது கேளாதவர் அனைவருக்கும் காது கேட்கும் கருவிகளை இலவசமாக வழங்கும் திட்டம்.

*வினா எண். 717— திரு இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் காதுகேளாத அனைவருக்கும் காது கேட்கும் கருவிகள் இலவசமாக வழங்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயலுக்கு வரும்?

[1982 ஏப்ரல் 1

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) தமிழ் நாட்டில் காது கேளாத அனைவருக்கும் காது கேட்கும் கருவிகள் இலவசமாக வழங்குவதற்கு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இதற்கான விவரங்கள் மாவட்ட ஆட்சியாளர்களிடம் கேட்கப் பட்டுள்ளன. அவை கிடைக்கப்பெற்றவுடன் ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை எத்தனை பேர்களுக்கு, காது கேட்காதவர்களுக்குக் கருவிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன? அதனால், அரசுக்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1975—81 வரை 2,825 காது கேட்கும் கருவிகள் பள்ளி செல்லும் காது கேளாத சிறுவர்களுக்கு வழங்கப் பட்டிருக்கிறது. இந்தக் காது கேட்கும் கருவி ரூ. 350 என்று குறிப்பில் இருக்கிறது.

திரு இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது மாவட்ட ஆட்சித் தலைவரின் மூலமாக காது கேளாதவர்களைக் கணக்கெடுப்பதாகச் சொன்னார்கள். காது கேட்காதவர்களிடம் கணக்கு எடுக்கும்போது இவர்கள் பேசுவதைச் சரியாகப் புரிந்து கொள்ளாத நிலை இருப்பதால், ஊமைகளைக் கோர்ட்டிலே விசாரிக்கும்போது, ஊமைகள் பேசுவதைப் புரிந்துகொள்ளும் நிபுணர்களை அமர்த்துவதைப்போல், காது கேட்காதவர்களைக் கணக்கெடுக்க அந்த முறைகள் புகுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதுதான் அரசாங்கத்தின் வாயிலாக மருத்துவர்களைப் போட்டு அவர்கள் மூலமாகப் பரிந்துரை செய்யப்படுகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காது கேட்காதவர்களுக்குக் கருவி வழங்குகின்ற தற்போதுள்ள முறை, காதிலே ஒரு கருவியைப் பொருத்திக் கொண்டால், நன்றாகக் கேட்கும் என்ற முறைதான் இப்பொழுது பின்பற்றப்பட்டு வருகிறது. அப்படிப் பார்க்கும் போது, யாரையாவது பார்த்தால், காது கேட்காதவர் கருவி பொருத்தி இருப்பார் என்று தெளிவாகத் தெரிகிறது. அப்படி அல்லாமல், மூக்குக் கண்ணாடியிலே இருக்கக்கூடிய பிரேமில்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY LIBRARY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அதைப் பொருத்தி, நெற்றியிலேயிருந்து, காது எலும்போடு தொடர்புபடுத்தினால் காது நன்றாகக் கேட்கும் என்ற முறை கண்டு பிடிக்கப்பட்டு இருக்கிறது. அது அரசுக்குத் தெரியுமா ? இனி வருகின்ற காலங்களிலே அதைக் கொஞ்சம் குறைந்த விலையிலே கொடுப்பதற்கு அரசு ஆராய்ச்சி செய்து கொடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காது கேளாதவர்களுக்குக் கருவி வழங்கக் கூடிய திட்டத்தை வறுமை நிலையிலே உள்ள அனைவருக்கும் இலவசமாக வழங்கக் கூடிய திட்டத்தை அரசு அமுல் செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதைத்தான் நான் மூலக் கேள்விக்கான பதிலிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். காது கேளாத அனைவருக்கும் காது கேட்கும் கருவிகள் வழங்குவதற்காக அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக் குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[முற்பகல் 10.10]

(2) தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் விடுதி பந்தோபஸ்து ஏற்பாடு

திரு. ஆர். நவநீத கிருஷ்ண பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலே இப்பொழுது அதிகமாகக் களவு போய்க் கொண்டிருக்கிறது. இரண்டு தினங்களுக்கு முன்பு மாண்புமிகு உறுப்பினர் திரு. இஸ்மாயில் அவர்களின் அறையை உடைத்துப் பொருட்களை எடுத்துச் சென்றிருக்கிறார்கள். நேற்றிரவு எங்கள் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. முத்து ராமலிங்கம் அவர்களுடைய மோதிரம், வாச் ஆகியவை களவு போயிருக்கிறது. இப்படிப்பட்ட பாதுகாப்பற்ற நிலைமை இருக்கிறது.